பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

15 MAR 2001

# வலம்புரி
# VALAMPURI

மங்கையரின் அழகுக்கு மேலும் அழகூட்டும் தங்க நகைகளை 22கரட்டில் பெற்றிட இன்றே நாடுங்கள்.
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1)603

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 2 வியாழக்கிழமை 15-03-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 86

## கெரில்லா போர் முறையில் விடுதலைப் புலிகள் மிகப் பெரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்

### பாராளுமன்றில் அமைச்சர்பட்டி வீரக்கோன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசாங்கம் தனது பயங்கரவாத தடைப்பட்டியலிருந்து நீக்கி விடுவதற்குரிய சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கின்றன.

புலிகளைபிரித்தானியா தடை செய்துவிட்டதுதானேயென்று ஆறுதலாகஇருக்காமல், விரைந்து இனநெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும்.

நீதியமைச்சர் பட்டிவீரக்கோன் நேற்று முன்தினம் பாராளுமன்றில் வரவு செலவுத்திட்டவிவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு ஆற்றிய நீண்ட உரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

சிங்கள அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைக்குஅரசியல் தீர்வு காண்பதற்கு அனுசரணையாகச் செயற்படவில்லை.

ஆதலால் தமது தடையை பிரித்தானிய அரசாங்கம் நீக்கவேண்டும்மென விடுதலைப் புலிகள் தமது வழக்கறிஞர்கள் மூலம் பிரித்தானியாவைக் கோரக் கூடும்.

எனவே தாமதியாது உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் கெரில்லா போர் முறையில் தேர்ச்சி பெற்றவர்கள். மரபுரீதியான

→ 8ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் குண்டு வீச்சு

(வவுனியா)

வன்னிவான்பரப்பில்நேற்று பிற்பகல் திடீரென நுளைந்த மிக் 27ரகப் போர் விமானங்கள் முல்லை மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளில் குண்டுகளை வீசியுள்ளன. [ந-4]

## ஐ.பி.எம்.எஸ் இல் அனுமதி அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் தக

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ● பேராசிரியர் எலியேசர்

# தமிழீழப் போருக்கு பேராதரவு தந்தவர்

### தலைவர் பிரபா இரங்கல்!

(வவுனியா நிருபர்)

**கணிதமேதை பேராசிரியர் கிறிஸ்லி ஜெயம்எலியேசர் ஒரு உயர்ந்த மாமனிதர், உலகம் போற்றும் அறிஞர், உன்னதமான தேசப்பற்றாளர். சிறந்த பண்பாளர். அவரது மரணம் தமிழர் தேசத்துக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.**

**கணித மேதை எலியேசரின் மறைவு குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுத்த அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.**

கடந்த 10ந் திகதி தனது 83வது வயதில் காலமான கணிதமேதை எலியேசரின் மறைவு குறித்து தலைவர் வே. பிரபாகரன் விடுத்துள்ள அனுதாபச் செய்திவன்னியில் இருந்து அவுஸ்திரேலியாவிலுள்ள அவரது குடும்பத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது;

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; பேராசிரியர் எலியேசரின் மறைவு குறித்து நாம் ஆழ்ந்த

→ 8ஆம் பக்கம் பார்க்க

### பொங்குதமிழ் எழுச்சியைப் பாராட்டி

## யாழ். பல்கலைக்கழக சமூகத்திற்கு களுத்துறை சிறைக்கைதிகள்கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக சமூகம் தமிழர்களின் தாயக சுயநிர்ணய உரிமையைவலியுறுத்தி கடந்த ஜனவரிமாதம்19ந் திகதிநடாத்திய மாபெரும் எழுச்சிநிகழ்வான பொங்கு தமிழ்நிகழ்விற்கு ஆதரவும் பாராட்டும் தெரிவித்து களுத்துறைச் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகள் கடிதம் ஒன்றை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கைதிகளை விடுதலைசெய்க நீர்கொழும்பில் பேரணி

(கொழும்பு)

சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்கு செல்லமுற்பட்டபோது கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப் பட்டவர்களை உடன் விடுதலைசெய்யுமாறு கோரி நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது

கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப் பட்டவர்களின் உறவினர்களே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தியுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களில சுமார் 130 தமிழ் இளைஞர்களு , யுவதிகளும் அடங்குவர்,

இதேவேளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள இவர்கள் தம்மை விடுதலை செய்யுமாறு அல்லது பிணையில் விடுவிக்குமாறு கோரி, ஜனாதிபதி சந்திரிகா விற்கும் நீதி அமைச்சர் பட்டிவீரக்கோனுக்கும் மகஜர் அனுப்பி வைத்துள்ளனர். (வ)

## பிர.செயலர்மகாலிங் த்தின் இறுதிச் சடங்கு இன்று

[யாழ்ப்பாணம்]

கடந்த 11ம் திகதி காலமான வலிதெற்கு பிரதேச சபைத் தலைவரும், இந்து சமயப்பேரவையின் உபதலைவருமான ஆ.மகாலிங்கத்தின் பூதவுடல் இன்றுகாலை அவரது சொந்தஊரானகுப்பிளானுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

திருநெல்வேலி கலாசாலை வீதியில்உள்ள அவரதுஇல்லத்தில் இருந்துபூதவுடல்காங்கேசன்துறை வீதி வழியாக எடுத்துச் செல்லப்பட்டு தாவடி, மருதனார்மடம், உடுவில் பிரதேச செயலர் பணிமனை சுன்னாகம் ஆகியஇடங்களில் மக்கள் அஞ்சலிக்காகவைக்கப்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மடு மாதா திருச்சொரூப பவனி நேற்று ஆரம்பம்

[வவுனியா]

நாட்டின் சமாதானம் வேண்டி மடுமாதா திருச்சொரூப பவனி நேற்று மடுத் திருப்பதியிலிருந்து ஆரம்பமாகியது.

தென்னிலங்கைக்கான இப் பவனி 17 நாட்கள் நடைபெறும்.

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமூடாக கொண்டு செல்லப்படும் மடு மாதா திருச்சொரூபம் அனுராதபுரம், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு குருநாகல், கண்டி ஆகிய மாவட்டங்களுக்கு பவனியாக எடுத்துச் செலலப்படும்.

இச் சொரூபம் மீண்டும் ஏப்ரல் மாதம் 2ம் திகதி மடுவைச் சென்றடையும் என கத்தோலிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## யாழ் பல்கலைக்கழக சமூகத்தால் மீண்டும் பொங்கு தமிழ் எழுச்சி!

### ஏற்பாடுகள் துரிதகதியில்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சமூகத்தினால் கடந்த ஜனவரி மாதம் 17ம் திகதி முன்னெடுத்து செல்லப்பட்ட பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை மீண்டும் ஒரு முறை நடத்துவதற்கு யாழ் பல்கலைக் கழக சமூகம் ஏற்பாடு செய்து வருகிறது.

இது சம்மந்தமான ஆலோசனைக் கூட்டமொன்றுநேற்று யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தில் நடைபெற்றது.

கொடிய யுத்தத்தை உடன் நிறுத்தி அர்த்தமும் நீதியுமான பேச்சுவார்த்தையினை விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்;

தமிழ்த் தேசியம், மரபுவழித், தாயகம், சுயநிர்ணயம் ஆகியவற்றை அங்கீகரிக்கும் நீதியான ஓர் அரசியல் தீர்வினை காண்பதே பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் நோக்கம் என்று யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் பொங்கு தமிழ் எழுச்சிநிகழ்வுப் பிரகடனத்தில் குறிக்கப்படுள்ளது. [ம]

## வவு.கல்வியியல் கல்லூரி மாணவர்கள் மோதல் முடிவுக்கு வந்தது!

[வவுனியா]

வவுனியா கல்வியியல்கல்லூரியில் தமிழ்சிங்கள மாணவர்க்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம்தொடர்பாக நேற்றுஇடம்பெற்ற5 மணிநேர சமாதானப்பேச்சுவார்த்தையை அடுத்து இரு சாராருக்குமிடையே சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது;

தமிழ் மாணவர்களும் சிங்கள மாணவர்களும் இனிமேல் எந்தவகையான வன்செயல்களிலும் ஈடுபடுவதில்லை என்று உறுதி அளித்துள்ளனர்.

இச் சமரசப் பேச்சு வார்த்தைகளில் வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திஎஸ். அழகரத்தினம், விரிவுரையாளர்கள், வவுனியா அரச அதிபர் கே கணேஸ், சர்வமதத் தலைவர்கள, பொலிஸார், இராணுவ

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அரச அதிபர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு செல்லவுள்ளதாக செயலகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

யு என்: எச். சி. ஆர் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள பயிற்சிப் பட்டறை ஒன்றில் கலந்து கொள்ளும் முகமாகவே கொழும்பு செல்லவுள்ளதாகவும் இம்மாதம் இறுதிப்பகுதியிலே மீண்டும் யாழ்ப்பாணம் திருப்பி விடுவார் எனவும் தெரியவந்துள்ளது. (உ-10)

# தலிபானின் கோழைத்தனமான செயலை நிறுத்த பாதுகாப்புப் படையை அனுப்புக?

## இந்து அமைப்புகளின் சம்மேளனம் கோரிக்கை

(தென்மராட்சி)

ஆப்கானிஸ்தானிலுள்ள புத்தரின்சிலைகளைச் சேதப்படுத்திவரும் தலிபான் இயக்கத்தின் செயல்பாடுகளை வடபிராந்திய இந்து அமைப்புகளின் சம்மேளனம் வன்மையாகக் கண்டனம் செய்து, ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு அவசர மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

சம்மேளனத்தின் செயலாளராக பி.சிவலோகநாதனால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது:

ஐக்கியநாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கின்ற அனைத்துநாடுகளும், ஒவ்வொரு பிரஜையினதும் மத சுதந்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அத்துடன் மனிதன் தான் விரும்பும் மத சுதந்திரத்தினைப் பின்பற்றுவதற்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்தவகையில், பார்க்கின்றபோது ஆப்கானிஸ்தானிலுள்ளபுத்தர்சிலைகளை தலிபான் இயக்கம் சேதப்படுத்தி வருகின்றமை மிகவும் அநாகரீகமானதும் கோழைத்தனம் நிரம்பியதுமாகும்.

எனவே ஆப்கானிஸ்தானில் தொடர்ந்தும் புத்தர்சிலைகள் உடைக்கப்படாமையை உறுதிசெய்யும் பொருட்டு ஐக்கியநாடுகள்சபை உடனடியாக ஐ.நா.பாதுகாப்புப் படையை அங்கு அனுப்புதல் வேண்டும்.

அத்துடன், இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் காரணத்தினால், ஏனைய நாடுகள் ஆப்கானிஸ்தானுக்கான பொருளாதாரத் தடையை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்துசமய அமைப்புகளின் சம்மேளனம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலடரிம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் இம்மகஜரின் பிரதிகள் இலங்கையிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் மற்றும் மத அமைப்புகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (உ-77)

சுன்னாகம் வர்த்தக சமூகத்தின்

கண்ணீர் காணிக்கை

ஆறுமுகம் மகாலிங்கம்

(உடுவில் பிரதேச செயலர்)

அன்னாரின் திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். துயருறும் குடும்பத்தினருக்கு சுன்னாகம் வர்த்தகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகம்
சுன்னாகம் வர்த்தக சங்கம்

(2626)

## வடமராட்சி கிழக்கிற்கு தனியான பிரதேசசபை

### நகரசபை கூட்டத்தில் தீர்மானம்

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு தனியான பிரதேச சபை வேண்டும் என வல்வெட்டித்துறை நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகரசபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் இத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

32 கி மீற்றர் நீளமான இப் பகுதிக்கு தனியான பிரதேச சபை அமைப்பதன் மூலமே இப் பகுதியை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் பருத்தித்துறையுடன் இப் பகுதியைஇணைத்திருப்பதால் பருத்தித்துறைப் பகுதி மட்டுமே அபிவிருத்தி செய்யப்படுவதாகவும் இதனால் வடமராட்சி கிழக்குப் பகுதி புறக்கணிக்கப் படுவதாகவும் இவர் தெரிவித்தார். (உ-43)


# மகளிர் அதிர்ஷ்டக் கணக்கின் ( VANITHA VASANA )

## 2000 ஆம் ஆண்டின் அதிர்ஷ்டசாலிகள் இதோ!

| கிளை | கணக்கு இல. | பரிசு |
|---|---|---|
| சுன்னாகம் | 40146 | ரூபா 50,000/- |
| பருத்தித்துறை | 75031 | குளிர் சாதனப் பெட்டி |
| ஊர்காவற்றுறை | 80014 | தொலைக்காட்சிப் பெட்டி |
| சாவகச்சேரி | 40052 | தங்க நாணயம் |
| பிரதான வீதி | 35116 | தங்க நாணயம் |
| ஸ்ரான்லி வீதி | 125 | தங்க நாணயம் |
| ஸ்ரான்லி வீதி | 146 | தங்க நாணயம் |
| ஸ்ரான்லி வீதி | 257 | தங்க நாணயம் |
| ஸ்ரான்லி வீதி | 308 | தங்க நாணயம் |
| ஸ்ரான்லி வீதி | 331 | தங்க நாணயம் |
| ஸ்ரான்லி வீதி | 332 | தங்க நாணயம் |
| பல்கலைக்கழகக் கிளை | V0076 | தங்க நாணயம் |
| பல்கலைக்கழகக் கிளை | V0098 | தங்க நாணயம் |
| பல்கலைக்கழகக் கிளை | V0129 | தங்க நாணயம் |
| பல்கலைக்கழகக் கிளை | V0229 | தங்க நாணயம் |
| பல்கலைக்கழகக் கிளை | V0480 | தங்க நாணயம் |
| பல்கலைக்கழகக் கிளை | V1202 | தங்க நாணயம் |
| கன்னாதிட்டி | 20127 | தங்க நாணயம் |
| கன்னாதிட்டி | 20298 | தங்க நாணயம் |

நீங்களும் அதிர்ஷ்டசாலியாக, இன்றே உங்கள் அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் மகளிர் அதிர்ஷ்டக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

மக்கள் மனமறிந்த வங்கி

# மக்கள் வங்கி

(கி-1601)


## இராசி பலன்

15. 03. 2001
(பங்குனி 2, வியாழன்)
சஷ்டி மாலை 5.27 வரை
அனுசம் ந இ. 12.01 வரை
ராகு காலம் 1.51 - 3.21
சுப நேரம் 7.51 - 9.21
சித்தம்

**மேடம்**
தேவையற்ற பிரச்சினை, பிரயாண பயம், மனக் கிலேசம், காரிய தாமதம்.

**இடபம்**
விருந்துபசாரம், வாகன வசதி, சுவாரஸ்யம், காரிய ஜெயம்.

**மிதுனம்**
முயற்சி கை கூடும், சந்தோசம், பகைவர் விலகுவர், பண வரவு.

**கடகம்**
தாழ்வு நிலை, வியாபார மேன்மை, சென்ற இடத்தில் செல்வாக்குக்குறைவு, கலகம்.

**சிங்கம்**
அற்பர் நேசம், தன்நம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**கன்னி**
வாக்கு மேன்மை, புதியவர் சந்திப்பு, காரியம் வெற்றி, பிரயாணம்.

**துலாம்**
வாக்குக் கலகம், பொருள் விரயம், கௌரவக் குறைவு, முயற்சி மந்தம்.

**விருச்சிகம்**
ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, ஜனவசியம், காரிய நன்மை.

**தனுசு**
பிரயாணம், சுப செலவு, காரிய அலைச்சல், துயரம்.

**மகரம்**
காரியம் கை கூடும், கௌரவம், தனலாபம், மன மகிழ்ச்சி.

**கும்பம்**
தொழில் மேன்மை, அதிகாரம், பெரியோர் நட்பு, காரிய நன்மை.

**மீனம்**
பிரயாணம், கட்டுப்பாடு, உஷ்ண நிலை, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## மறைந்தார் மாண்பு

# உதவும் மனங்கொண்ட உத்தமர்

# பேராசிரியர் சி.ஜே. எலியேஸர்

கணிதம் என்றால் எலியேஸர். எலியேஸர் என்றால் கணிதம் என்பது நான் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த காலத்திலும் அதன் முன்னரும், பின்னரும்எல்லோரும்அறிந்து மதித்தவிடயம். இவர் யாழ்ப்பாணத்தவர். ஆனால் பேராசிரியர் எலியேஸர் அவர்கள் விரைவில் அவுஸ்ரேலியா சென்றுவிட்டது யாழ்ப்பாணத்தின்- இலங்கையின் அதிர்ஷ்டமின்மையே ஆகும். அவுஸ்திரேலியாவில் முதல் அவர் மொனாஷ் பல்கலைக்கழகத்தில் கற்பித்திருக்க வேண்டும் பின்பு அதே இடத்தில் லற்றோப் பல்கலைக்கழகத்தில் கற்பித்தார்.

### சான்றிதழ்

நான் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 50 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதிகளில் கற்றுக்கொண்டிருக்கும்போது எனது தேவைக்கு நான் அப் பல்கலைக்கழக மாணவி என்பது குறித்துச் சான்றிதழ் ஒன்று. அதன் தலைவர் ஷேர் ஐவர் ஜென்னிங் இடமிருந்தோ அல்லது அதன் பீடாதிபதியிடம் இருந்தோ அவசரமாக எடுக்க வேண்டி இருந்தது: அன்று ஒரு விடுமுறை நாள். அவர்களை அவர்களது அலுவலகங்களில் அன்று சந்திக்க முடியாததாலும் பீடாதிபதி சி.ஜே. எலியேஸர் அவர்கள், நான் கொள்ளுப்பிட்டியில் வசித்திருந்த வீட்டிற்கு அண்மையில் இருந்ததாலும், அவர்களது குடும்பம் எனது தாய் வழியில் ஓரளவு உறவினராய் இருந்ததாலும் சி.ஜே. எலியேஸர் அவர்களது இல்லத்தில் சந்திப்பதற்கு துணிந்து சென்றேன். அங்கு அவருக்கு என்னை அறிமுகப்படுத்துவதற்கு நான் எத்தனித்தபோது, அவர் 'உம்மை எனக்கு தெரியும், நான் என்ன வகையில் உமக்கு உதவலாம்' என்று கேட்டதும் (நான் அங்கு கணிதத் துறையில் படிக்காததால்) பொதுவாக மாணவர்களில் இவ்வளவு அக்கறை இருந்தது பற்றி நான் வியப்படைந்தேன். எனது தேவையை அவரிடம் கூறியதும், உடனே அவர் உள்ளே சென்று, சில நிமிடங்களில் எனக்கு தேவையான சான்றிதழை தந்தார்.

### உதவும் பெரியார்

பலதசாப்தங்களின் பின் நான் யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்பிக்கும் பொழுது எனது இரண்டாவது தடவையான ஆய்வு படிப்பிற்கான விடுமுறையில் (1990 களின் ஆரம்பத்தில்) அவுஸ்திரேலியாவின் மொனாஷ்பல்கலைக்கழகத்தில் ஒருவருடகால ஆய்வு (விலங்கியல்) செய்வதற்கு ஒழுங்கு செய்யும்போது, உலகளாவிய ரீதியில் மதிக்கப்பட்ட மருத்துவப் பேராசிரியருடன் தொடர்பு கொண்டேன். அங்கு நான் இருப்பதற்கு ஒழுங்குகள் செய்துதந்த நண்பனான அப்பேராசிரியரிடம் அப் பல்கலைக்கழகப் பற்றியும் அதன் சூழல் எப்படியானது முதலியவற்றை நான் முன் அறியாதபடியால் மேலும் அவைபற்றி எழுதிக் கேட்டபொழுது அவர் 'இங்கு பேராசிரியர் எலியேஸர் இருக்கிறார், அவர், இங்கு வரும் இலங்கைத் தமிழர்களைக்கவனித்து பல்வேறு வழிகளிலும் உதவுபவர். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் கட்டாயம் வாருங்கள் என்று உற்சாகமூட்டி எனக்கு எழுதினார்' எலியேஸர் இலங்கையில்மட்டுமின்றி அந்நிய தேசத்தில்கூட இவ்வளவு மதிக்கப்பட்டார் என்பது தமிழராகிய எங்களுக்கு மிகப்பெருமையாக உளளது. நான் அங்கு செல்வதற்கு பயணம் தொடங்கியும் பாதிவழியில் யாழ்-குடாநாட்டிற்கு வெளியே செல்லு முன்னரே யுத்த சூழ்நிலையால் திரும்பிவர வேண்டியாயிற்று.

### மறைவு

பேராசிரியர் எலியேஸரின் மறைவு எம் எல்லோருக்கும் பேரிழப்பாகும். யாழ்ப்பாணத்தில் அவரைப் பற்றி நன்கு அறிந்த அவரது மாணவர்கள் முதலியோர் எங்கள் இளம் சமுதாயத்தினருக்கு அவரைப்பற்றி நன்கு அறிய வைக்கவேண்டும். (எலியேஸர் ஹன்டி பேரின்பநாயகம், திருமதி மைத்திரிபால் சேனநாயக ஆகியோரின் நெருங்கிய உறவினராவர்.)

**திருமதி நவமணி செல்வராஜா**
இளைப்பாறிய பேராசிரியை


## இலங்கை நிர்வாகசேவை, இலங்கை கணக்காளர் சேவை ஆகியவற்றிற்கு ஆட்சேர்ப்புப் பரீட்சைகளுக்கான

# பயிற்சி வகுப்புக்கள்

வடக்கின் அபிவிருத்தி புனர் வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் பின் குறிப்பிடப்படும் சேவைகளுக்கான ஆட்சேர்ப்புக்கான பரீட்சைகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **இலங்கை நிர்வாக சேவையில் வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள வெற்றிடங்கள் நிரப்புவதற்கு விசேட பரீட்சை.**
- **இலங்கை கணக்காளர் சேவையில் சேர்வதற்கான போட்டிப்பரீட்சை**

1. இப் பயிற்சி வகுப்புக்கள் ஸ்ரான்லி வீதியிலுள்ள இவ்வமைச்சின் மண்டபத்தில் வார இறுதி நாட்கள், விடுமுறை நாட்கள் மற்றும் மாலை நேரங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கணக்காளர் சேவைக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 26 - 01 - 2001 இன் வர்த்த மானியில் கோரப்பட்டு விண்ணப்ப இறுதித் திகதி 26-02-2001 ஆக இருந்தது. இலங்கை நிர்வாகசேவை ஆட்சேர்ப்புக்கான விசேட பரீட்சை விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.
3. இப்பயிற்சி வகுப்புக்களில் சேரவிரும்பும் தகைமை பெற்றவர்கள் தங்கள் பெயர்களை இவ்வமைச்சின் யாழ்ப்பாணக்கிளை அலுவலகத்தில் பிற்காணப்படும் படிவத்தை நிரப்பி 31-03-2001 இற்கு முன் சமர்ப்பிப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.
4. தேர்ச்சி பெற்ற பயிற்றுநர்கள் இவ்வகுப்புக்களை நடத்துவார்கள். இதற்கான ஒரு கட்டணமும் அறவிடப்படும்.

### படிவம்

1. பயிற்சி பெறவிரும்பும் பாடத்திட்டம் :
   இலங்கை நிர்வாகசேவை / கணக்காளர் சேவை
2. முழுப்பெயர் :
3. முகவரி :
4. தகைமைகள் :
5. மொழிமூலம் :
6. பயிற்சி வகுப்புக்களில் பங்கேற்கக்கூடிய காலம் : வாரஇறுதிநாள்/ மாலைவகுப்புக்கள்/ விடுமுறைவகுப்புக்கள்
7. வேறு விபரங்கள் :

**தலைவர்**
வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை

(கி-1606)


# பொலிஸ் நிலையத்தில் மொழிப் பிரச்சினை

## சுன்னாகம், மானிப்பாய் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், மானிப்பாய் பகுதி பொலிஸ் நிலையங்களில் போதியளவு தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமைகளில் இல்லாமையினால் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதிலும் விசாரணையிலும் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.

மேற்படி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப் போகும் போது தாம் ஓர் சிங்கள மொழி பெயர்ப்பாளரையும் அழைத்துச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அவருக்கு வேதனம் வழங்கவேண்டியுள்ளதாகவும் அவ்வாறு மொழிபெயர்க்கும் வேளைகளில் கூட விளங்காமை, தெளிவின்மை போன்றவற்றால் தாம் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-2)

# குடாநாட்டில் மண்ணுக்கு தட்டுப்பாடு விலையும்வெகுவாகஏற்றம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மணல் அள்ள தடை விதிக்கப்பட்டதை அடுத்து குடாநாட்டில் மண்ணிற்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முன்னர் குடாநாட்டில் ஆயிரம் ரூபா விற்ற ஒரு லோட் மண், தற்போது மூவாயிரம் ரூபாவிற்கு மேல் விற்கப்படுகிறது.

இதனால் குடாநாட்டில் புதிதாக கட்டிட நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்போர் பாதிப்படைந்துள்ளனர்

வடமராட்சி கிழக்கில் இருந்து மணல் ஏற்றப்படுவதை தடுப்பதில் அப்பகுதி வெகுஜன அமைப்புக்கள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றமைகுறிப்பிடத்தக்கது. உ43

# வி.கழகங்களுக்கிடையே இன்று கலந்துரையாடல்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் அமைந்துள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் இன்று பி.ப 3.00மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது தொடர்பான கலந்துரையாடலாக இது அமைவதால் அனைத்து கழகங்களின்பிரதிநிதிகளையும் தவறாதுகலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச சபை உபதலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் அறிவித்துள்ளார். (உ-23)

# அறிமுக விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்ட ஈழகேசரிச் சிறுகதைகள் தொகுப்பு அறிமுகவிழாவும் படைப் பாளிகள் கௌரவிப்பும் வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யா/தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் இடம் பெறவுள்ளது.

செங்கை ஆழியான் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் கலாபூஷணம் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை வரவேற்புரையையும். கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை நூல் அறிமுக உரையையும் கலாநிதி எஸ். சிவலிங்கராசா கௌரவிப்புரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

நூல் மதிப்புரைகளை செம்பியன் செல்வன், கோகிலா மகேந்திரன் ஆகியோர் ஆற்றுவர்.

ஆனந்தன், வரதர், செ நடராஜா, சொக்கன், சு. வேலுப்பிள்ளை, நடனம், பரணி, புதுமைலோலன், குறமகள், இ அம்பிகைபாகன் கசின், சிற்பி, என் கே ரகுநாதன், எஸ் பொன்னுத்துரை, டொமினிக்ஜீவா ஆகிய படைப்பாளிகள் கௌரவிக்கப் படவுள்ளனர். (உ)

# சிறுவர் ஓவியப் போட்டி ஏழாலை ம.வி. மாணவர் இருவருக்கு தங்கப்பதக்கம்

(சங்கானை)

புத்தாயிரம் ஆண்டின் இருபதாவது சர்வதேச சிறுவர் ஓவியப் போட்டியில் ஏழாலை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்தஇரு மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது:

கருணாமூர்த்தி அன்பழகன், தில்லைநடராசா கிசாந் ஆகியோரே தங்கப் பதக்கம் பெற்ற மாணவர்கள்ஆவார்.

இதே பாடசாலையைச் சேர்ந்த செல்வி சோபனா கதிரமலை அகில இலங்கை ரீதியான கனிஷ்ட பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (உ-9-124)


## புனித அந்தோனியார் பெருவிழா

நரயாம் பிட்டி மெலிஞ்சி முனையில் (ஊர்காவற்றுறை)

16-03-2001 வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்வில் பக்தர்களை கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பங்குத்தந்தையர்கள்,
கரம்பொன்.

[6227]

# மார்ச் 24ற்குப் பின்னரும் யுத்த நிறுத்தம் நீடிக்கும்?

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை மார்ச் 24ற்குப் பின்னரும் நீடிப்பதில் அக்கறை கொண்டுள்ளனர்.

இவ்வாறு லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட தமிழ்க் கட்சி ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு தூண்டுதல் அளிப்பதற்காகவே விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்கவுள்ளனர்.

சமாதானத்தைக் காண்பதற்கு தற்போது கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது என்று சர்வதேச சமூகத்திடமிருந்து மாத்திரமல்ல, ஐரோப்பா, மற்றும் வடஅமெரிக்காவிலும் பரந்து வாழும் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களிடமிருந்தும் விடுதலைப் புலிகளுக்கு கடுமையான நெருக்குதல்கள் ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறு அத்தமிழ்க்கட்சி மேலும் கூறியிருக்கின்றது.

[செ]

# பயங்கரவாதத் தடை சட்டத்தின்கீழ் கைதான மூவர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான மூவர், சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றினால் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த தெய்வேந்திரன் யசோதரன், கோப்பாய் வீதி உரும்பிராயைச் சேர்ந்த துரைசிங்கம் மோகனராஜன், 108-A கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த குமாரசாமி விஜயாலன் ஆகிய மூவருமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

[உ-6]

# வலிகாமம் மேற்கில் கல்வி நிறுவன ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் இணைந்து, தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தை அமைத்துள்ளனர்.

வலி மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந திரிலோகநாதன் தலைமையில் தனியார் கல்வி நிறுவன ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று முன்தினம் சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

ஒன்றியத் தலைவராக ச.ஐங்கரன், செயலாளராக செல்வி ந.பங்கயற்செல்வி பொருளாளராக எஸ். தியாகராஜா ஆகியோரும் போசகராக வலிமேற்கு பிரதேச சபைத்தலைவரும், ஈ.பி.டி.பி வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந.திரிலோகநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

[இ]

# நியமனக் கடிதங்களை பெற்று கடமையை பொறுப் பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

தீவகவலயப்பாடசாலைகளில் 01 02.2001 ஆம்திகதி முதல் நியமனம் பெற்றுள்ள கீழ்வரும் பெயருடையவர்களினை உடனடியாக தீவக வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமூகமளித்து நியமனக் கடிதங்களினைப் பெற்று உரிய பாடசாலைகளில் கடமையேற்குமாறு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்,

சதாசிவம் சதானந்தன்-றங்கூன் இல்லம் நவாலிதெற்கு மானிப்பாய், பாலகிருஷ்னன் குணாகரன்- உடையார் வளவு இடைக்காடு அச்சுவேலி, அருளையா அதிசயராஜா-முருகமூர்த்தி கோவில் வீதி நவாலிதெற்கு மானிப்பாய், குணராஜா கந்தரூபன்-'கமலாவாசம்' இணுவில் தெற்கு சுன்னாகம், கமேஷ் சுகந்தினி -10/6,3ம்குறுக்குத் தெரு கொழும்புத்துறை, சிவானந்தம் சிவகரன் நெட்டிலிப்பாய் கோண்டாவில் மேற்கு கோண்டாவில், சின்னப்பு சதீஸ்- 'கலைநகர்' அளவெட்டி தெற்கு அளவெட்டி, பாலகிருஷ்ணன் கோபிரமணா-சுழிபுரம் மத்தி சுழிபுரம், நாகலிங்கம் சதீஸ்கரன் சுதுமலை தெற்கு மானிப்பாய், ஆனந்தஜயேந்திரன் றஜீவன்-பாடசாலை வீதி தாவடி தெற்கு, மகாதேவன் முகுந்தன் - வட்டுவடக்கு சித்தன்கேணி, கலைவாணி சண்முகநாதன்-511/1 பெரேராலேன் கொழும்பு 6,

(உ)

# மகாலிங்கத்தின் உடலுக்கு இன்று மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலரும் இந்துசமயப் பேரவையின் உப தலைவருமான ஆ. மகாலிங்கத்திற்கு இன்று சுன்னாகப் பகுதியில் அஞ்சலி நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

உடுவில் பிரதேச செயலகத்தினரால் பிரதேச செயலக வளாகத்திலும், சுன்னாக வர்த்தக சங்கத்தினரால் சுன்னாகம் பொதுச் சந்தைக்கு அருகிலும் இவ் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

அன்னாரின் இறுதிக் கிரியைகளை நடத்துவதற்கான திகதியை நிர்ணயிப்பதில் தாமதம் ஏற்படும் எனவும் தெரியவருகின்றது.

செ2

# ஒரே தினத்தில் வெவ்வேறு இடங்களில் குண்டுகள் செயலிழக்க வைப்பு

(கொழும்பு)

அரியாலைப்பகுதியில் கடந்த 12 ஆம் திகதியன்று படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது3 குண்டுகள் கண்டெடுக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாகவிசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே தினத்தன்று மட்டுவில் தெற்குப்பகுதி, சுன்னாகம் ஆகிய இரு வேறு பகுதிகளில் இருந்து மோட்டார் குண்டு ஒன்றும் 47கண்ணிவெடிகளும் கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(உ-9]

# உயர்நீதிமன்றநீதியரசின் உரைக்கு சிஹல உறுமய எம்.பி.திலக்சீற்றம்

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதியரசர் சி. விக்னேஸ்வரனின் உரை பிரிவினைக்கு துணைபோவதாக அமைந்திருந்தது.

இவ்வாறு சிஹல உறுமய எம்.பி. திலக்கருணாரட்ண குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவியேற்ற சி. விக்கினேஸ்வரன் தனது முதல்அமர்வின் போது தமிழில் உரையாற்றியிருந்தார் அதனையே மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

இலங்கை அரசியல் யாப்பின் 157 சீ - 7 சரத்தின் பிரகாரம், பிரிவினைக்கு துணை போவதோ, ஆதரிப்பதோ, தூண்டுவதோ நிதிவசதி அளிப்பதோ குற்றமாகும்.

அரசியல் அமைப்பின் 7வது அட்டவணையின் பிரகாரம் அரசியல் அமைப்பிற்கு ஆதரவு தெரிவித்தே உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பதவிப் பிரமாணம் எடுப்பார்கள்.

உயர்நீதிமன்ற நீதியரசர் உரையாற்றியபோது, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையினரான மக்கள் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கியதில் சிறுபான்மையாகியுள்ளனர் எனத்தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினர் சிறுபான்மையினர் தான். வடக்கு-கிழக்கில் சிங்களவர் சிறுபான்மையினர்தான் ஆனால் முழு நாட்டிலும் சிங்களவர் சிறுபான்மையினரா?

ஆகவே அவர் கூறிய அக்கருத்து பொருந்தாத ஒன்றாகவே அமைந்துள்ளது.

இவ்வாறு சிஹல உறுமய எம.பி. திலக் கருணாரட்ண மேலும் தெரிவித்துள்ளார்.

(செ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(வட்டுக்கோட்டை)

அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிப 2 00 மணிக்கு அதிபர் வே. மேகநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிமேற்கு பிரதேச சபைத்தலைவர் என். திரிலோகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

[உ-24]

## ஆலயச்சூழலை அசிங்கப்படுத்தும் பேர்வழிகள்

(கல்வயல்)

யாழ் பருத்தித்துறை சாலையில் உள்ள கட்டைப்பிராய் வைரவர் ஆலயத்திற்கு அருகாகக்காணப்படும் குளத்தினுள் பொறுப்பற்ற சிலர் குப்பை கூழங்களை வீசிவருவதனால் ஆலயச்சூழல் அசுத்தம் மிகுந்ததாய் மாறிவருவதாக அங்கு இறை தரிசனத்திற்குச் செல்லும்பக்தர்கள கவலை தெரிவித்துள்ளனர்

[உ-111]

## மில்லேனியம் பதிப்பு

(கல்வயல்)

வடக்கு-கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகத்தால் வருடா வருடம் வெளியிடப்படும் வடக்கு-கிழக்கு மாகாண புள்ளிவிபரத் தகவல்கள் நூல் 2000 ஆம் ஆண்டுக்குரியது 'மில்லேனியம் பதிப்பு' வெளிவந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வோருக்கும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்க்கும் ஏனைய பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க்குமான பல பயனுள்ள புள்ளிவிபரத் தகவல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

(உ-111)

## சமாதான நீதவான் நியமனம்

(கல்வயல்)

சுன்னாகம் கந்தரோடைக் கிராமத்தின் ஜே/200 கிராம அலுவலர் லயன் கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு தீவு முழுவதற்குமான சமாதான நீதவானாக நீதி அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(உ-111)

## புலி உறுப்பினர் மரணம

(கொழும்பு)

கடந்த 11 ஆம திகதியன்று நாகர் கோவில் பகுதியில் படையினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல்நிலையம் அறிவித்துள்ளது.

(உ-9)

# தீவக தடகளவிளையாட்டு இடம்பெறும்தினம்மாற்றம்

(ஊர்காவற்றுறை)

தீவகக் கல்வி வலயப்பாடசாலைகளுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் வரும் ஏப்ரல் மாதம் 6, 7 ஆம் திகதிகளில் யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

முதலில் இப்போட்டிகள் இம்மாதம் 27, 28 ஆம் திகதிகளில் இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்கமுடியாத சிலகாரணங்களினால் இத்திகதி மாற்றம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-75)

# கடமையில் இருந்த சிப்பாய் தற்கொலை

[மந்திகை]

கிளாலி முன்னரங்க நிலைய கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ பயிலுநர் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில், மாத்தறை பொல்கொலை எனும் இடத்தைச் சேர்ந்த ஏ. எம். எஸ். அபயசேகரா என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

[உ-23]


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விளையாட்டரங்கில கூடைப்பந்தாட்ட ஆடுதளம் நிர்மாணிப்பதற்கான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டிட நிர்மாண வேலைகளுக்காக இக்ராட் (Ictad) நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரா அல்லது பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கேள்விப்பத்திரங்கள் பெற தகுதியுடையவராவார்.

கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 26.3.2001 வரை ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக்காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும், சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படக்கூடிய வைப்புத்தொகை ரூபா 4500/-
மீளளிக்கப்படாத வைப்புத்தொகை ரூபா 500/-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 05.04 2001 காலை 10.00 மணிக்கு முன் தலைவர், கேள்விச்சபை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும் அல்லது யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப்பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்பட வேண்டும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களையாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பராமரிப்புப் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றிக் கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

தபால்பெட்டி இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(கி-1600)

## இன்று ஒரு தகவல்

# எதற்கும் கவலைப்படாதே

மனிதனின் விருப்பப்படி பெரும்பாலும் எதுவும் நடப்பதில்லை. அவரவர் செய்த வினைப்பயனின் படியே செயல்கள் நடக்கின்றன. எண்ணிய விருப்பமெல்லாம் நிறைவேறி விட்டால் அப்புறம் மனிதன் மனிதனாக இருக்க மாட்டான். லௌகீக விஷயத்தில் மட்டுமில்லாமல், ஆன்மீக விஷயத்திலும் எதிர்பாராத செயல்கள் நடக்கின்றன. மனிதன் அவற்றை விரும்பி ஏற்றாலும், ஏற்காவிட்டாலும் அந்தச் செயல்களின்பயன்களைஅனுபவித்தே தீரவேண்டும்.

ஒருவன் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறான். நல்ல சம்பளமுள்ள உயர்ந்த பதவி கிடைக்க வேண்டும் என்று விரும்பித் தேடுவான்.ஆனால்அவனுக்கு உயர்ந்த பதவி கிடைக்கும் என்பது நிச்சயமில்லை.ஏமாற்றமே அவனுக்கு கிடைக்கலாம். இன்னொருவனுக்கு ஆன்மீகத்துறையில் அதிக நாட்டம் இருக்கும் ஜப,தபங்களையெல்லாம் செய்வான். துதி நூல்களையெல்லாம் ஓதுவான்.ஆனால் அவன் எதிர்பார்க்கும் மன அமைதியோ, பேரருளோ அவனுக்குக் கிடைக்காமல் இருக்கலாம்.

தோல்வியைக் கண்டு இந்த இருவரும் மனம் கலங்குவர். எந்த நிலையிலும் இப்படி எதிர்பார்க்கும் செயல்கள் நடக்காமல் மனம் வருந்துகிறது நாம் எதிர் பார்த்தபடி நடக்கவில்லையே என்று எண்ணிக்கவலைப் படுவர். கவலைப்படுவதால் என்ன பயன்? காரியம் செவ்வனே நடந்து விடுமா?கவலை கருநாகம் அம்மா என்று பாரதியார் பாடுகிறார். கவலைப்படுவதால் உடல் நலம் தான் குன்றுமே அல்லாமல்,காரியம் நடந்து விடாது.கவலைப் படுவதால் காரியங்கள் நடந்து விடப்போவதில்லை என்ற அறிவு நமக்கு இருந்தாலும், நம்மை அறியாமல் கவலை நம்மை ஆட்கொண்டு விடுகிறது.எந்த ஒரு சிறு கருத்தையும்,திகழ்ச்சியையும் கண்டு கவலைப் படத்துவங்கி பழகி விட்டால் கவலைப்படுதல்என்பதே நமக்குப் பழக்கமாஆகிவிடும். நம்முடைய மனத்தை இப்படிப் பழக்கப் படுத்தக்கூடாது.

படித்தவர் படிக்காதவர் என்ற பாகுபாடில்லாமல் கண்டதற்கெல்லாம் கவலைப் படுகிறார்கள். கவலைப்பட்டுப்பணத்தையும் மேனியையும் கெடுத்துக் கொள்கின்றனர். கவலைப் படுபவருக்கு வாழ்க்கையில் பிடிப்போ இறை உணர்வில் தீவிரமோ ஏற்படமுடியாது. மனதில் கவலை இருந்தால் மனம் எப்படித் தியானத்திலோ மற்ற எந்தக்காரியத்திலோ ஒன்றும்? மன ஒருமைப்பாட்டுக்கு கவலை தான் முதல் எதிரி.

கவலைப்படுவதையே பழக்கமாக ஆக்கிய நிலையில் எந்தக் காரியத்தைச் செய்தாலும்,வெற்றிகரமாக அக்காரியத்தைச் செய்து முடிக்க முடியாது. மேலும் மேலும் தோல்வி, மேலும்மேலும் கவலை என்ற ரீதியில்போய்க் கொண்டிருக்கும். கவலையால் ஏற்படும் மனத்தளர்ச்சி உடல் தளர்ச்சியைக் கொடுத்து விடும்.நாமா கவலைப்பட விரும்புகிறோம்? நம்மை மீறிச் சூழ் நிலை உருவாகிவரும் போது என்ன செய்வது?எப்படி மீள்வோம்? என்ற துயர் மனத்தைக்கப்பிக் கொள்கிறதே என்று சிலர் நினைக்கலாம்.

அதேநேரத்தில் எந்தச் சூழ்நிலையிலும் மனம் கலங்காத சில மனிதர்களையும் நாம் பார்க்கிறோம். எந்தத் துயரையும் தாங்கிக்கொள்ளும் மனோதிடம் உள்ளவர்களையும் நாம் பார்க்கிறோம். அவர்கள் எதைக் கண்டும் பதற மாட்டார்கள். சிந்தித்துச் செயற்படுவார்கள். நாம் விரும்பாத நிகழ்ச்சியைக் கண்டவிடத்து நாம் மட்டும் ஏன் பதட்டப்படவேண்டும்? அவர்களுக்குக் கவலையைத் தராத அதே சூழ்நிலை நம்மை மட்டும் ஏன் பாதிக்க வேண்டும்? சிந்தித்துப் பார்த்தால் ஓர் உண்மைபுரியும் கவலைப்படுதல் என்பது மனிதனின் ஒரு குணமேயாகும். எந்த விளைவுக்கும் ஒரு காரணம் இருந்தே ஆகவேண்டும். இந்தக் கவலை என்ற குணம் மனதில் எப்படி உறைகிறது?

நமக்குஏற்பட்டிருக்கும் அந்தச் சூழ் நிலையை நமக்கு வேண்டாத, நாம் விரும்பாத சூழ்நிலை என்று நினைத்து விடுகிறோம். ஒரு செயலை நாம்பார்க்கும் அல்லது எடுத்துக் கொள்ளும் நிலையைப் பொறுத்திருக்கிறது. அந்தச் செயல் நம்முன் விளைவிக்கும் பயன். நாம் விரும்பாத செயல் நடக்கிறது என்றால், அதற்குக் காரணம் நாம் செய்த பாவச் செயல்களே என்பதை உணர வேண்டும்.

நாம் செய்த பிழைகளை அறிந்து, உணர்ந்து இறைவனிடம் முறையிட்டால் நிச்சயம் அவன்நம் கவலைகளை, மனக் கிலேசங்களைப்போக்குவான். இறையருளில் ஆழ்ந்த நம்பிக்கையும். அவன் பாதத்தைப் பற்றிக் கொள்ளும் மனநிலையும் பெற்றுவிட்டால் எந்தச் சூழ்நிலையும், எந்தச் செயலும் நம் மனதில் கவலையை உண்டாக்கமாட்டா. இறையருளை வேண்டிப்பெற முயலவேண்டியதே கவலையை ஒளிக்க ஒரே மாற்றாகும்.

'தனக்குவமை இல்லா தான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றலரிது' திருக்குறள்.

க.க இராமலிங்கம்

# தென்மராட்சி செல்ல அனுமதி வழங்கும் பணி தற்காலிக நிறுத்தம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பகுதிக்குச் செல்லும் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கொடிகாமம் 522 வது படைப் பிரிவு அலுவலகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

தாம் வசித்த வீடுகளைப் பார்வையிடல் மற்றும் ஆவணங்கள் உரிமைகளை மீட்கவென படையினரின் அனுமதி பெற்றுச் செல்லும் சிலர் அங்கு சென்று புரியும் குளறுபடிகள்,

மற்றும் சரசாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் அண்மையில் கால் இழந்தமை போன்ற சம்பவங்களைத் தடுத்து புதிய ஒழுங்கான நடைமுறை ஒன்றினை புகுத்தி அவற்றை ஒழுங்கமைக்கும் முகமாகவே இப்பணி இடை- நிறுத்தப்பட்டுள்ளதெனவும்

இனி வரும் காலங்களில் இவற்றினைக் கண்காணிக்கும் பணி அந்தந்த கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதெனவும் மூத்த படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ 111)

## பாலஸ்தாபன அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யா/வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலில் இன்று பாலஸ்தாபன அபிஷேகம் இடம்பெறவுள்ளது. (உ)

## தரம் உயர்வு

(கல்வயல்)

கோப்பாய் அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையின் நடனத் துறை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவனேசன் இலங்கைகல்வி நிர்வாகசேவை தரம் 111 க்கு கல்வியமைச்சினால் தரம் உயர்த்தப் பட்டுள்ளார். (உ-111)

## வினைத் திறன் பரீட்சை 24 ல்

இலங்கைத்தொழில்நுட்ப சேவை வகுப்பு-2 அ பிரிவுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை இம் மாதம் 24ந்திகதி யாழ். வேம்படிமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான மீட்டல் வகுப்புக்களுக்கு யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் தலைவர், செயலாளர்களுடன்தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. [ந]

## கடைஉடைத்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக வீதியருகில் உள்ள பலசரக்குக் கடையொன்று கடந்த திங்களன்று கள்வர் குழுவினால் உடைத்து திருடப்பட்டுள்ளது.

பெறுமதி வாய்ந்த பொருட்கள் பலவும் திருட்டுப் போயுள்ளமை குறித்து சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (உ-2)

## அத்துமீறல்

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் உள்ள கற்பிட்டியா என்னும் இடத்தில் இந்திய மீன்பிடிக் கப்பல்கள கடந்த 11 ஆம் திகதி மீன்பிடித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததை இலங்கைக் கடற்படை அவதானித்துள்ளதாகவும் இதே தினத்தன்று மன்னார்க் கடற்ப்பரப்பிலும் 100 இற்கும் அதிகமான இந்திய மீனவர்கள் மீன்பிடித்தலில் ஈடுபட்டதாகவும் விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ 9

## படைவீரர் பலி

(கொழும்பு)

வவுனியாவில் உள்ள வாய்க்கால் கூழங்குளப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதியன்று விடுதலைப் புலிகளின் கைக்குண்டுத்தாக்குதலில் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-9]

## விவசாய உள்ளீடுகள் உபகரணங்கள் வழங்கல்

(ஆவரங்கால்)

பல்வேறு பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்து வலிகிழக்கில் வசித்து வருகின்ற விவசாயிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளில் பின்வரும் திகதிகளில் வைத்து விவசாயஉள்ளீடுகள், விவசாய உபகரணங்கள்வழங்கப்படவுள்ளன.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் கிழக்கு, ஊரெழு ஆஓய கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு உரும்பிராய் வடக்கு கிராம அலுவலர் பணிமனையில் வைத்து இம்மாதம் 19 ஆம் திகதியும்,

நீர்வேலி தெற்கு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நீர்வேலி தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து 23 ஆம் திகதியும் வழங்கப்படவுள்ளன. (உ-57)

## மூட்டிய தீயுள் பாய்ந்த குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தற்கொலை நோக்கில் மூட்டிய தீயுள் பாய்ந்த குடும்பப் பெண் சிகிச்சை பலனளிக்காத் நிலையில் நேற்றுமுன்தினம் யா/ போதனாவைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்

ஊரெழுவைச்சேர்ந்த சி.சின்னத்தங்கம் (வயது-52) என்ற சித்தசுவாதீனம் அற்ற பெண்ணே இவ்வாறு மரணமடைந்தவராவார். (உ-104)

## படையினரின் உறவினர்களுக்கு இலவச கணனிப்பயிற்சி

(கொழும்பு)

படையினரின் உறவினருக்கு இலவச கணனிப் பயிற்சி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கணனித் துறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்கும் பொருட்டே இவ் இலவச கணனிப் பயிற்சிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் படையினரின் குடும்பத்தவர்கள் நன்மையடைவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (செ)

## வன்னிக்கு அத்தியாவசிய பொருட்கள் அனுப்பஏற்பாடு

(கொழும்பு)

படையினரின் கட்டுப்பாடில்லாத வன்னிப் பகுதி மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வன்னிமக்களின் ஆரோக்கிய நலன் கருதி பெருந்தொகையான மருந்துப் பொருட்கள்,சத்துணவுகளையும் துரிதமாக அனுப்பி வைப்பதற்கு தேவையான அனுமதியை பாதுகாப்பு அமைச்சும் வவுனியா இராணுவத் தலைமையகமும் வழங்கியிருப்பதாக வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ். யோகநாதன் தெரிவித்துள்ளார். (செ)

## மலையகத்தில் புலிகள் ஊடுருவல் தடுக்க பொலிஸ் அணிகள் தயார்

[கொழும்பு]

விடுதலைப்புலிகள் மலையகத்தில் பெரும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அங்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த பொதுமக்களை தூண்டி வருவதாகவும் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மலையகத்தில் ஊடுருவியிருக்கும் புலி உறுப்பினர்களை இனம்கண்டு கைது செய்வதற்கு வசதியாக பொலிஸாரின் மூன்று அணிகள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன்,

கிராம சேவகர்களுக்கு ரூபா இரண்டாயிரம் தொடக்கம் ஐயாயிரம்வரை இலஞ்சம் வழங்கி போலி அடையாள அட்டைகள் பெற்று ஊடுருவும் திட்டத்தினை முன்கூட்டியே அறிந்து முறியடித்து விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## சைவத்திற்கும் தமிழுக்கும் பாதுகாவலராக இருந்தவர்

### பெனடிக்ற் தனபாலன் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் மற்றும் நல்லூர் பிரதேச செயலரும், இந்து சமயப் பேரவையின் உபதலைவருமான ஆர். மகாலிங்கம் அவர்களின் மறைவு, சைவத் தமிழ் மக்களுக்கு ஈடு செய்யமுடியாத பாரிய இழப்பாகும்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பெனடிக்ற் தனபாலசிங்கம் அமரர் மகாலிங்கத்தின் மறைவு குறித்து வெளியிட்ட, இரங்கற் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ் இரங்கற் செய்தியில் சைவத்துக்கும் தமிழுக்கும் பாதுகாவலராக இருந்து பொதுநலனைத் தனது குறிக்கோளாகக்கொண்டு அவர் மக்களுக்கு ஆற்றிய சேவையை என்றுமே மறக்க முடியாது.

## தரம் உயர்வு

யா/அச்சுவேலி மகாவித்தியாலயம், கடந்த 30.1.2001 முதல் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (உ-57)

## இந்தோனேசியாவில் தொடரும் இனக்கலவரங்கள்; நாட்டின் எதிர்காலத்தை இருள் மயமாக்கும்

(ஜகார்த்தா)
இனக்கலவரங்கள் கிளர்ச்சிககாரர்களின் ஆர்ப்பாட்டங்கள் என்பன அதிகரித்த நிலையில் இந்தோனேசியாவின் எதிர்காலம் மிக மோசமாகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்றும் தலைகர் ஜகார்த்தாவில் ஜனாதிபதி வாஹிட்டிற்கு ஆதரவானவர்களும், எதிர்ப்பானவர்களும் மோதிக் கொண்டனர்.

இந்தோனேஷிய ஜனாதிபதி செயலகத்தில் கடந்த திங்களன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி வாஹிட் கலந்து கொண்ட வேளை, அவரது மாளிகையின் மீது சிலர் கல்வீச்சுக்களை நிகழ்த்தி சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டங்கள் அப்பகுதியில் இன்னமும் தொடர்ந்த வண்ணம் உள்ளதாக தெரியவருகிறது.

(உ-9)

## பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வருமாறு பிரதமர் ஜஸீருக்கு அழைப்பு

(ஜெருசலேம்]
மத்தியகிழக்கில் வன்செயல்களை தவிர்த்து அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன்வருமாறு இஸ்ரேலிய புதிய பிரதமர், ஷரோன் பலஸ்தீனிய தலைவர் யஸீர் அரபாத்திற்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இந்த வன்செயல்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு விரைவில் தாம் இருவரும் தனிப்பட்ட தொடர்புகளை ஏற்படுத்த முடியுமென்றும் ஷரோன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். [உ-7]

## அடுத்த ஆண்டில் நிலாவுக்கு விண்கலம்

### ஐரோ- விண்வெளி மையம் ஏற்பாடு

(லண்டன்)
ஐரோப்பிய விண்வெளி மையம் தனது நிலாவுக்கான ஆய்வுக்கலத்தை அடுத்த ஆண்டு அனுப்பவுள்ளது.

ஏரியன்ராஷிக் மூலம் செலுத்தப் படஇருக்கும் 350 கிலோ எடையுள்ள "ஸ்ரேக் 01" என்ற இச் செயற்கை விண்கலத்தில் நிலாவில் ஆராயப்படும. விசேடசாதனங்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன.

இந்த செயற்கைக் கோளில் நிலாவின் மேற்பரப்பு மற்றும் ஏனைய கோள்களின் தோற்ற அமைப்பை படம் எடுப்பதற்காக புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

இது அடுத்தவருடம் ஒக்டோபர் மாதம் வரையில் ஏவப்படவிருக்கிறது. (உ-7)

## ஆயுதமுனையில் பேச்சுக்கு இஸ்ரேல் இணங்காது

### ஷரோன் திட்டவட்டமாக அறிவிப்பு

(ஜெருசலேம்)
துப்பாக்கீ முனையின் கீழ் பலஸ்தீனர்களுடன் ஒரு போதும் பேச்சு வார்த்தை நடைபெறாது என இஸ்ரேலிய பிரதமர், ஏரியல்ஷரோன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் எகுட் பராக் துப்பாக்கி முனையில் பலஸ்தீனர்களுடன் பேசியது போன்று தன்னால் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளதுடன் ஐந்து மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் வன்முறைகளுக்கு முடிவு காணப்படும் வரை பேச்சு என்ற சொல்லிற்கே இடமில்லை என்று தனது நிலைப்பாட்டை ஷரோன் மீண்டும் வலியுறுத்தியுள்ளதாக சி. என். என் தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை, ஜஸீர் அரபாத் ஷரோனுடன் பேச்சுக்கள் ஆரம்பிப்பது தொடர்பாகக் கடிதம் அனுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது உ-9

## செய்திப்பரல்

★ பிலிப்பைன்ஸில் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி ஜோசப் எஸ்ராடா மணிலாவில் பகிரங்கக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார்.

★ 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை சீனாவில் நடத்த வேண்டாம் எனக்கோரி ரொறான்ரோவில் ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது.

★ ஜெயலலிதா ஒதுக்கியுள்ள தொகுதிகள் தமக்குப்போதுமானதாக இல்லையென்று காங்கிரஸ் அதிருப்தி தெரிவித்துள்ளது.

★ அக்கினி ஏவுகணை- 2 இனை இராணுவ நடவடிக்கைகளில் சேர்க்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

★ தலிபானின் புத்தர்சிலை உடைப்புத்தொடர்பாக இஸ்லாமியக் கல்விமான்களின் கோரிக்கை பிந்திய ஒன்று என கோபிஅனான் கூறியுள்ளார்.

(உ- 9)

## இஸ்ரேலின் கழிவுநீர் பலஸ்தீன பகுதிகளில்

(ஜெருசலேம்)
இஸ்ரேல் நன்னீர் குழாய் மூலம் பலஸ்தீனத்துக்கு அழுக்கு நீரையும் கழிவுகளையும் அனுப்பி வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

காஸாவைக் கடந்து மத்திய கரையைப் போய்ச் சேரும் வரண்ட ஆற்றுப் படிகங்களூடாக கழிவு நீரை இஸ்ரேல் அனுப்பியுள்ளது என பலஸ்தீன சுற்றாடல் துறை அமைச்சர் ஈசூர் கபூஸ் அபியா காஸாவில் தெரிவித்துள்ளார்.

இதனால் சுற்றாடல் பேரழிவு ஒன்று ஏற்படவுள்ளது என்று அமைச்சர் எச்சரித்ததோடு சுமார் 10 இலட்சம் பலஸ்தீன மக்கள் நமபியிருக்கும் காஸாவின் தரை மட்ட நீர் களங்கப்படுத்தப்படலாம் என்றும் கடலோரங்கள் அசுத்தப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார் (உ-7)

## தொழுகையில் ஈடுபட்டோர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலி

(இஸ்லாமபாத்)
லாகூர் மசூதி ஒன்றில் தொழுகையில ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில 8 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர், பலர்படுகாயமுற்றனர்;

ஆயுதம் தாங்கிய மூவர் மோட்டார் சைக்கிளில் சென்று இவ் வெறியாட்டத்தை நிகழ்த்திவிட்டுதப்பிச் சென்றுள்ளனர். (உ-7)

## காஷ்மீர் பிரச்சினையை தீர்க்க ஐ.நா.செயலர் அனானிடம் உதவி

### பாகிஷ்தான் கோரியது

(இஸ்லாமபாத்]
காஷ்மீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை உதவ வேண்டும் என பாகிஸ்தான் அரசு கோபி அனானிடம் வேண்டுகோள விடுத்துள்ளது.

கடந்த ஞாயிறன்று பாகிஸ்தானில் ஐ.நா. செயலர் கோபி அனானுடன் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் அப்துல்கத்தார் பேச்சு நடத்துகையிலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஐ.நா. தீர்மானம் மற்றும் ஐ.நா. பட்டயத்தில் கூறப்பட்டதற்கிணங்க காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் பேசி ஒரு சுமுகமான தீர்வை ஏற்படுத்தித்தருமாறு ஐ.நா. செயலரிடம் மேலும் கோரப்பட்டுள்ளது;

[உ-9]

## உலக தரிசன அறிவுப் போட்டி - 08

### போட்டிக்கான வினாக்கள்

01) மொறாக்கோ மன்னரின் பெயர் என்ன?
02) அண்மையில் 140 இலட்சம் பவுண் விலையாகக் கோரப்பட்ட ஜோர்ஜ் வாஷிங்டனின் ஓவியம் எந்த ஆண்டு வரையப்பட்டது?
03) 112 வருடங்களின்பின் உரியஇடம் போய்ச்சேர்ந்த தபாலட்டை எங்கிருந்து எங்கு அனுப்பப்பட்டது?
04) அண்மையில் 92 வயதில் இறந்த கிரிக்கெட் வீரர் யார்?
05) அறுபது வயதில் இந்தியாவிலிருந்து மெக்காவிற்கு ஹஜ்யாத்திரையை கால்நடையாக மேற்கொண்ட முதியவரின் பெயர்என்ன?
06) தேவகௌடாவின் மனைவியின் பெயர் என்ன?
07) அண்மையில் இறந்த 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த ஓவியரின் பெயர் என்ன?
08) இந்தியாவில் விடுதலைச் சிறுத்தைகள் அணி எதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.
09) அண்மையில் டெனிஸ் வீராங்கனை ஒருவரின் உருவத்தில் கணனி வைரஸ் பரப்பப்பட்டது. அவ் டெனிஸ் வீராங்கனையின் பெயர்என்ன?
10) 10 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து நிலத்தில்குதித்து சாதனைசெய்த டேவிற் மொறிஸ் எந்நாட்டவர்?
11) இணையத்தளத்தில் இயங்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் எத்திகதியில் தொடக்கிவைக்கப்பட்டது?
12) உக்ரைனின் ஜனாதிபதி யார்?
13) ஈரோஸ் என்னும் துணைக்கோளில் அண்மையில் தரையிறங்கிய விணகலததின் பெயர் என்ன?
14) மனித மரபணுக்கள் குறித்துவியத்தகு கண்டு பிடிப்பை நிகழ்த்திய விஞ்ஞானிகள் எவ் எவ் நாட்டைச் சேர்ந்தவர்கள?
15) 95 மில்லியன் வயதுடைய டைனோசோரின் எச்சங்கள் எப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?
16) இம்மாதம் பசுபிக் கடலில் வீழ்த்தவிருக்கும் ரஷ்ய விண்வெளிக் கலத்தின் பெயரை தருக?
17) இஸ்ரேலில் அண்மையில் பதவியேற்ற பிரதமரின் பெயர் என்ன?
18) 24 மணித்தியாலம் தொடர்ச்சியாக இசைக்கருவிகள் மீட்டி சாதனை புரிந்தமை எந்நாட்டில் இடம்பெற்றது?
19) மனித உறுப்புக்களை திருடி விற்பனைசெய்த வைத்தியர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?
20) திபெத்திய ஆன்மீகத் தலைவரின் பெயர்என்ன?
21) த. மா. கா கட்சியின் தலைவர் யார்?
22) அக்னி-ஏவுகணை-2 பரிசோதனை எங்கு இடம்பெற்றது?
23) சந்திரனில் காலடிவைத்த இரண்டாவது நபரின் பெயர் என்ன?
24) 3 ஆம் தர இலக்கண அறிவில் உள்ளார், என கேலி செய்யப்பட்ட ஜனாதிபதி யார்?
25) ரஷ்யாவிற்கு உளவறிந்தார் என அமெரிக்காவால் கைது செய்யப்பட்ட எப். டி. ஐ உளவு அதிகாரி யார்?

### போட்டி விதிமுறைகள்

1) வயது வேறுபாடின்றி எவரும் பங்கு பற்றலாம். (வலம்புரிக் குடும்பத்தினரை தவிர)
2) வினாக்கள் யாவும் ஜனவரி மாத வலம்புரியின் உலக தரிசனத்தைச் சார்ந்ததாக அமையும்
3) போட்டியாளர் தனது பெயர், விலாசம், பிறந்த திகதி என்பனவற்றை குறித்தபடிவத்தில் எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து 'வலம்புரி' இல 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
4) போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன் அது பற்றிய விபரம் வலம்புரியில் வெளியிடப்படும்.
5) விடைகள் யாவும் 25.03.2001 இற்கு முன் வந்து சேரக் கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.
6) வினா இலக்கங்களை குறித்து விடையை எழுதினால் மட்டும் போதுமானது. (வினாத்தாளை இணைக்க வேண்டாம்.)

### உலக தரிசன அறிவுப் போட்டி இல - 8

முழுப் பெயர்; ..............................

முகவரி; ..............................

— — — — — — — — — —

பிறந்த திகதி: — — — — — — — —

போட்டியாளர் கையொப்பம் — — — — — — — —

பெற்ற புள்ளிகள்: — — — — — —

இடும்பைக்கே கொள்கலங்
கால்லோ குடும்பத்தை
குற்றம் மறைப்பான் உடம்பு
-குறள்-

# வலம்புரி

## வவுனியாவிலும் ராக்கிங்!

வவுனியா கல்வியியல் கல்லூரியிலும் 'ராக்கிங்' நோய் தொற்றிவிட்டது. அதன் விளைவு தமிழ்- சிங்கள மாணவர்களிடையே மோதல். கல்வி கற்பதற்காகப் பல்வேறு இடங்களிலிருந்தும் வவுனியா கல்வியியல்கல் லூரிக்குச்சென்ற மாணவர்கள் தமது குறிக்கோளை மறந்து'ராக்கிங்' என்ற வதைக் கொடுமையில் ஈடுபட்டு தமக்கிடையேயுள்ள உறவைப் பகைத்து விட்டனர்.

இன யுத்தம் ஒரு புறத்தில் நடக்கும் போதும் தமிழ்- சிங்கள மாணவர்கள் ஏதோ ஒரு வகையில் நிலைமைகளை உணர்ந்து இன யுத்தம் மாணவர்களின் ஒற்றுமையைபிரிக்க முடியாதென்ற வகையில் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களில்தமிழ்- சிங்கள மாணவர்கள் ஒற்றுமையோடு தமது கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர்,

பல்கலைக் கழக அனுமதியில் வாய்ப்பை இழந்தவர்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைந்த கல்வியியல் கல்லூரிகளுக்குச் சென்ற மாணவர்கள் தமக்குக் கிடைத்தஅரியசந்தர்ப்பத்தை மறந்துராக்கிங்சேட்டையில் ஈடுபடுகின்றாரெனில் அவர்களின் கல்வியால் சமுதாயத்திற்குக் கிடைக்கக் கூடிய நன்மை கேள்விக் குறியாகவே அமைந்துள்ளது.

பல்கலைக் கழகங்கள் தோறும் ராக்கிங்கை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை நிர்வாக மட்டத்தில்,மட்டுமன்றி மாணவர்கள் மட்டத்திலும் முன்னெடுக்கப்படும் போது, வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்கள் எல்லாவற்றையும் கெடுத்துவிடுவது போல் பொறுப்பற்ற முறையில் ராக்கிங் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

கல்வியியல் கல்லூரியில் நிகழ்ந்துள்ள 'ராக்கிங்' சூத்திர தாரிகள் இனங் காணப்பட்டு அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதில் கல்லூரி நிர்வாகம் பின் நிற்காது, முனைப்புடன்செயலாற்ற வேண்டும். அதன் மூலமே தமிழ் - சிங்கள மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலுக்கு முடிவு.கட்டி, வவுனியா கல்வியியல் கல்லூரி மோதல் வேறு எங்கனும் பரவாமல் தடுப்பது எல்லோரினதும் கடமையாகும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் அபரிமித வளர்ச்சி

(நேற்றைய தொடர்ச்சி)

● பட்டத்துறை மாணவர்களுடைய கல்வித்திட்ட வளர்ச்சி பற்றிச் சிறிது கூறுவீர்களா?

□ பட்ட மாணவர் அணியில் 6 அணியினரும், Semester புதிய கல்வித்திட்ட அணியில் 1 ஆம் அணியும், மொத்தம் 7 பட்ட அணியிலும் சுமார் 300க்கு மேற்பட்ட மாணவர்கள் இசைத் துறையில் பயின்று கொண்டிருக்கின்றனர். அதே போன்றுநடனத்துறையிலும், சித்திர வடிவமைப்புத்துறையிலும் உள்ளனர். தென்னாசியாவில்நுண்கலையில் தலைசிறந்த கேந்திரமாக இந்த இராமநாதன் நுண்கலைக் கழகம் மாறும் என்பதற்கு இவை கட்டியம் கூறும் எனலாம். எமது பட்ட மாணவர் அணியைச் சார்ந்தவர்கள் 24 தலைசிறந்த இளநிலை ஆய்வுகளைப் பூர்த்தி செய்துள்ளனர். இவ்வாய்வுகளுடன் நான்காவது பட்ட அணியைச் சார்ந்தவர்கள் சுமார் 29 ஆய்வுகளை முன்னெடுத்துள்ளனர். அத்துடன் வெளிவாரிப்பட்டம் பெறும் இறுதி நிலை மாணவர்கள் சுமார் 10 பேர் தமது ஆய்வுகளைப் பூர்த்தி செய்துள்ளனர். இவற்றுள் ஈழத்தைச் சேர்ந்த ஆய்வுகளுடன் ''சங்ககாலம் முதல் இன்றுவரை இசை நுண்மை வளர்ச்சி பற்றிய ஆய்வுகளும், இசைக்கலைஞர்களது அரும்பணி பற்றிய ஆய்வுகளும்,வாத்தியக்கலைஞர்கள் பற்றிய ஆய்வுகளும் சென்னை தமிழகத்து சங்கீத வித்துவ சபை, (Music Academy), தமிழிசைச் சங்கம் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைப்பணி ஆகியவை பற்றிய ஆய்வுகளும் தற்போது 4 ஆம் பட்ட அணியினர் மேற்கொள்ளும் சிறந்த பல ஆய்வுகளும், எமது இசைத்துறையின் வளர்ச்சியில் பாரிய முன்னேற்றத்தினைத் தந்துள்ளது. இவ்வாய்வுகளைக் காலகதியில் எமது துறை வெளியீடுகளாகத் தருவதற்கு நாம் முயற்சி செய்து வருகின்றோம்.

இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்று 50 ஆண்டுகளில் கண்ட வளர்ச்சியை நாம் 5 ஆண்டுகளில் கண்டுள்ளோம். எமது சக ஆசிரியர்களும், பட்ட மாணவர்களும் இவற்றை உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளனர். இந்திய பல்கலைக்கழகம் வழங்கும் பட்டத்தை விட எமது (BFA) கலைமாணி சிறப்பு பட்டம் எதிர்காலத்தில் சர்வதேசத்தையும் சுற்றிப் பெருமிதப்பவனி வரும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்றே கூறலாம். எமது பட்ட மாணவர் மேலைத்தேச இசையினை 3 ஆண்டுகளில் தொடர்ச்சியாகப் பயிலும் வாய்ப்புகள் இங்கு அளிக்கப்படுகிறது. கீழைத்தேய இசையியலுடன் மேலைத்தேய இசையியலைத் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய புலமைத்துவத்தையும் பெறும் எமது மாணவர்க்கு இணையான ஒரு நுண்கலைப்பட்ட மாணவனை இதுவரை கீழை நாடுகள் உருவாக்க முடியாதென்பதை உறுதியாகக் கூற முடியும். இவ்வாறான கல்வி அளிக்கைகளுக்கு உந்து சக்தியாக விளங்கும் எமது துணைவேந்தருடன் கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன்,உயர்கலைப்பட்டப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், வடமொழிப் பேராசிரியர் வி. சிவசாமி மற்றும் எமது துறையின் சிரேஷ்ட விரிவுரை நிபுணர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், இளம் விரிவுரையாளர்கள், வருகை விரிவுரையாளர்கள் போன்றவர்களது பங்களிப்பும் இசைத்துறை வளர்ச்சியில் இரண்டறக் கலந்து நிற்பதைக் காணலாம். பல புதிய நவீனத்துவ சிந்தனைகளை முன்கொண்ட மாணவ அணியும், ஆசிரிய அணியும் தனித்துவமான இத்துறையின் கற்கை நெறிகளை நிச்சயம் முன்னெடுப்பார்கள் எனக் கொள்ளலாம்.

### இசைத்துறைத்தலைவர் ந. வி. மு. நவரத்தினம்

பேட்டி கண்டவர்

### கே. வி. சசிகுமார்

● இசை நவீனத்துவம் என்கிறீர்களே அது எப்படி...?

□ மிகச் சிறந்த கேள்வி. இன்று கணனியிலிருந்து உலக இணைப்பு ஊடகம் வரை நவீனத்துவ சாதனமாக இயங்குகிறது. எமது மாணவ அணிக்கு இசை நுட்பங்கள் கணனி மயப்படுத்தக் கூடிய ஆற்றல்களையும் இசை (நுட்பங்களை) வாண்மைகளை தரவு படுத்தக் கூடிய ஆற்றல்களையும், இசை அளிக்கைகளை ஒலி நுட்ப நாடாவாக்கை கூடிய ஆற்றல்களையும், வளர்ப்பதற்கு சிறந்ததிட்டம் ஒன்று வரையப்பட வேண்டும் அவற்றுள்,

1. Statica' nformation in music technolgy
2. The oudiovedio re:ordlng technolcgy in n usic
3 The cumPuter Intemet prodcasting in music

போன்ற பாட அலகுகள் குறிப்பாக நமது இசை முயற்சியில் உருவாக்கப் பெற்றால் இத்துறையில் பல புதிய நவீனத்துவங்களை முன்னெடுக்கலாம். இத்தகைய எமது தேவைகளுக்கேற்ற நிதியினை எமது ஒளி ஒலிப்பதிவு நுட்ப வெளியீடுகள் மூலம் நிறையப்பெற்றுக் கொள்ள முடியும் இவற்றிற்காகச் சர்வதேச தகவல் இணைப்பு மையங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய காலம் மிக விரைவில் நமக்கு ஏற்படலாம்.

● இராமநாதன் நுண்கலைத்துறை இசைத் துறைத் தலைவர் அவர்களே, இத்தகைய அரிய நேரத்தினை ஒதுக்கி, எமக்கு இந்த தகவல்களை மிக விரிவாக யாழ்ப்பாண சமூகத்தினரும் அறியும் வண்ணம் விளக்கினீர்கள். மிக்க நன்றி.

□ அதைக் குறிப்பிட வேண்டாம். ஏனெனில் பல காலமாக நாம் இசையில முயன்று வரும் பல அரிய செயற்பாடுகளை நமது சமூகம் அறிவதோடு உலகத்திலேயே நமது இராமநாதன் நுண்கலைக்கழகம் குறிப்பிட்டு கூறத்தக்கதாக அமைய வேண்டும். அதுவே எனதும் எம் வளாகத்தினரினதும் அவா.

## புலிகள் மீதான தடை இலங். அரசிற்கான பொறி

(கொழும்பு)

''பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடை, இலங்கை அரசிற்கு வைக்கப்பட்ட பொறி ஆகும் என மேற்குலக இராஜதந்திரிகள் சிலர் கருத்துத்தெரிவித்துள்ளனர்''.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பாராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு சமாதானம் வேண்டுமானால் புலிகளுடன் பேசுமாறும் ஆலோசனை வழங்கப் பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். [செ]

## தவக்காலச் சிந்தனை - 16



குளிரில்நடுங்கியமயிலுக்கு போர்வை தந்தான் பேகன், படரமுடியாமல் தவித்த கொடிக்கு தன் தேரையே தானமாக்கினான் பாரிவள்ளல், அரிது,அரிது, பெறுவதற்குரிய அருள்மிகு கனியை ஔவைக்கு அளித்தான் அரசன் அதியமான். புறாவிற்காகதன் தசையை அறுத்துக் கொடுத்தான் சிபி எனும் பேரரசன். இவர்கள் அனைவரும் பரந்த இதயம் படைத்தவர்கள். சமுதாயத்தின் தேவைகளை அறிந்துதன் தாராள மனதினால் உதவிக்கரம் கொடுத்தவர்கள். இன்றைய நற்செய்தியிலே பணக்காரன் ஒருவன் ஏழை லாசருடைய தேவைகளை அறிந்தபோதிலும், தன் சுயநலம் என்ற சுவர்களைத் தாண்டி ஏழை லாசருக்கு உதவி செய்ய மறுக்கின்றான். ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' எனும் வான்புகழ் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப பகிர்ந்துவாழ இயேசு நம்மை இன்று அழைக்கின்றார். பகிர்ந்து உண்ணப்படும் மீனில் முள் இருக்காது என்ற சீனப் பழமொழிக்கேற்ப நாம் பகிர்ந்து வாழும்பொழுது அங்கே அன்பை, அரவணைப்பை, நீதியை, நியாயத்தை, சமத்துவத்தை, சகோதரத்துவத்தை நிலை நாட்டுகிறோம். நம்மில் பகிர்ந்து வாழும் தன்மை இருக்கின்றதா?

காவலன்

## மத்திய மருந்தகத்தை சொந்தக் கட்டடத்தில் இயக்கக் கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய மருந்தகத்தை அதன் சொந்தக் கட்டடத்தில் இயங்க அனுமதிக்க வேண்டும் என இப்பகுதியில் உள்ள படைத்தளபதியிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் இப்பகுதிக்கான வைத்திய சேவையில்பாக ண சுகாதாரப்பணிப்பாளர் பாரபட்சம் காட்டிவருவதாகவும் சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ள சடிதத்தில் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-43)

## சாயி அருளமுதம்



எந்த ஒரு சேவையையும் இழிவானதாகக் கருதாதீர்கள் உதாரணமாக,தெருவைக் கூட்டிச் சுத்தம் செய்தல் உங்கள் தகுதிக்குக் குறைவானதன்று. உங்கள் வீட்டின் தரையை நீங்கள் கூட்டிச் சுத்தம் செய்வதில்லையா? அழுக்கைச் சுரண்டி எடுத்துக் கழுவுவதில்லையா? நீங்கள் இந்தப் பணிகளைச் செய்ய முற்படும்போது, கிராமத்தவர்களும் மகிழ்ச்சியுடன் அதில் பங்குபற்றுவார்கள். நல்லவர்களாயிருப்பதற்கு ஏன் வெட்கப்பட வேண்டும்? உங்கள் மீது காண்பிக்கப்படும் ஏளனம் எத்தனையோ,மகான்கள் பெற்றிருந்த வெகுமதியேயன்றி வேறல்ல விரைவில் அது மங்கிப் போய் விடும். முகமதுவின் போதனைகளைக் கிரகிக்க முடியாதவர்களால் அவர் மக்காவிலிருந்து விரட்டப் பட்டார். இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார். ஆயினும் பல இலட்சக் கணக்கானவர்களின் இதயங்களில் பயபக்தியுடன் அவர்களுடைய பெயர்கள் ஒலிக்கின்றன.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை.

எண்ணம்போல வண்ண
நகைகளை மங்கையர்
மனங்குளிர செய்து
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா**
**ஜுவல்லறி**
**74, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்.**
[இ-1604]

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண

# யுத்த நிறுத்தமும், பேச்சும் அவசியம்

## மக்கள் வங்கி முகாமையாளர் கிங்ஸ்லி உரை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெறும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு பேச்சு வார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். இவ்வாறுநேற்று இடம்பெற்ற இலங்கையிலுள்ள வங்கி ஊழியர் தாய்ச் சங்கக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் முகாமையாளர்கிங்ஸ்லி இராசநாயகம் தெரிவித்தார்,

கன்னாதிட்டி மக்கள் வங்கி மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; வங்கி ஊழியர் சங்கம் பெருமளவான ஊழியர்களை உறுப்பினர்களாகக் கொண்டு பலமான நிலையில் இருப்பதற்கு ஊழியர்களின் ஒற்றுமையும், சங்கத்தின் சிறந்த தலைமைத்துவமுமே காரணமென்று தெரிவித்தார்.

சங்க நிகழ்வில்சங்க சிரேஷ்ட உதவித் தலைவர் ஏ.ரி நவரட்ண, உப செயலாளர் நிமால் ஜே பெரேரா, பொருளாளர் டீ. போயகொட, இலங்கை வங்கியைச் சேர்ந்த தி.ஸ்ரீஸ்கந்தராசா, தேசிய சேமிப்பு வங்கியைச் சேர்ந்த மகேந்திரசிங் மற்றும் இலங்கை வங்கி வவுனியாக் கிளை எம். சதாசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-06)

அழகிற்கு அழகூட்டும்
தங்க நகைகளை
உடனுக்குடன் செய்து
தருபவர்கள்
**நியூ**
**ராதிகாஸ்**
**நகைமாளிகை**
**189. கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**
(கி/ 1605)

### இருவரும் ஆண்களே!

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 4 ஆம் திகதி வலம்புரியின் 4 ஆம்பக்கத்தில் வெளியான 'படையினரிடம் சிக்கிய யுவதிகள் இருவர்' என்ற செய்தியில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டவர்கள் இருவரும் ஆண்களென்பதே சரியானதாகும். (ந)

### மோட்டரோலா செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள மோட்டரோலா தொலைபேசிச் சேவை நேற்று முழு நாளும் தொடர்புகளற்று ஸ்தம்பித்தது.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கு தொலைத்தொடர்பை பெற முடியாது பாவனையாளர்கள், பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர். [இ]

### 15 வருடத்தின் பின் விஜயம்

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு கடந்த 15 வருடங்களின் பின்மட்டு அரச அதிபர் இ. மௌனகுருசாமி நேற்று விஜயம் செய்தனர்.

ஐ சி ஆர் சியின்வழித்துணையுடன் உலக வங்கிக் குழுவுடன் இணைந்து அரச அதிபர் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. [ந]

### தமிழீழப்

துயரமும வேதனையும் அடைந்தோம். சோகத்தில் மூழ்கியுள்ள உங்களுடன் தமிழீழ தேசமும் பங்கு கொள்கிறது.

தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கிய பேராசிரியர் அவர்கள் ஆற்றிய அரும்பெரும் பணியை எமது வரலாறு என்றும் மறக்கப் போவதில்லை என்று அந்த அனுதாபச்செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

# புலிகள் தோல்வியுற்றதாலேயே பேச்சுக்கு முன்வந்துள்ளனர்!

## இராணுவத் தளபதி கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் வடபகுதி யுத்த முனையில் அடுத்தடுத்து தோல்விகளைச் சந்தித்தமையினாலேயே சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முன்வந்துள்ளனர்: இவ்வாறு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பல்லேகல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பல்லேகல மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தை மேசைக்கு அழைக்க வேண்டுமென்றால் அவர்களை யுத்த களத்தில் தோல்வி அடையச் செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் விடுதலைப் புலிகள் தோல்வி அடைந்து வருகின்றனர் படையினர் வெற்றியீட்டி வருவதுடன் பெருமளவு பிரதேசத்தைக் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் பல்லேகல கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பின்னர் கொழும்பு சென்று இவ்வாறு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### யாழ்.பல்கலைக்...

அக்கடிதத்தில்அரசபயங்கரவாதசக்திகளின் அழுத்தங்களுக்கும் சவால்களுக்கும் அடிபணியாது அஞ்சாநெஞ்சம்கொண்டு உறுதியோடு பொங்குதமிழ் நிகழ்வினை நடாத்தி தமிழினத்தின் உரிமைக்குரலாய் ஒலித்த உங்களின் எழுச்சிநடவடிக்கைகளால் நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

தீரமிக்க தியாகங்களால் தமிழினத்தின் பக்கப் பார்வையைச் செலுத்தியசர்வதேச சமூகத்தின்கதவுகளை தங்களால் நடாத்தப்பட்ட பொங்குதமிழ்எழுச்சி நிகழ்வு மீண்டும்மொருமுறை தட்டி உள்ளது; உங்களோடு நாமும் இணைய முடியாதளவுக்கு எமதுசிறைக்கதவுகள் இறுக்கப்பூட்டப்பட்டுள்ளன.

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை சிறப்புடன்நடாத்த ஒத்துழைப்பு வழங்கியஅனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள். கடந்த காலங் காலங்களிலும் கல்விச்சமூகம் இனத்தின்உரிமைக்காக பாடுபட்டு உழைத்தமையும் இங்கு நினைவுகூரத்தக்கது என்றும் அக்கடிதத்தில் மேலும்தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

### ஐ.பி.எம்.எஸ்...

வல் தொழில் நுட்ப கற்கைநெறிக்கான அரையிறுதிப் பரீட்சை இம்மாதம் 31ந் திகதியும். அடுத்தமாதம் முதலாந் திகதியும் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணம் ஐ.பி.எம்.எஸ் (IBMS)கணனி நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

### பிரதேச செயலர்...

படும்.

அவர் பிறந்த ஊரானகுப்பிளானில் பூதவுடல் வைக்கப்பட்டு மீண்டும் பலாலி வீதி வழியாக திருநெல்வேலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லூர் பிரதேச செயலகத்தில் மக்கள்அஞ்சலிக்காகவைக்கப்பட்ட பின்திருநெல்வேலிஇந்து மயானத்தில் தகனம்செய்யப்படும். [வ]

### கெரில்லா...

யுத்த தந்துரோபாயத்தை அவர்கள் கடைப்பிடித்து வருகின்றார்கள். புலிகளை பிரித்தானியா தடைப்பட்டியலில் சேர்த்துக் கொண்டமை, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீதும் அரசு மீதும் பிரித்தானியா வைத்திருந்த நல்லெண்ணமே ஆகும்.

யுத்தச் செலவீன அதிகரிப்பே இன்று எமது பொருளாதாரம் தடம்புரண்டு செல்வதற்கு காரணம். எனவே போர் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்; இனப்பிரச்சினையைந் தீர்க்க முன்னாள்ஜனாதிபதிகள் ஜே. ஆர் ஜெயவர்த்தனா மற்றும் ஆர். பிறேமதாசா போன்றவர்களும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த றொனிடிமெல் காமினிதிஸநாயக்கா போன்றவர்களும் ஆதரவு வழங்கினர். அதேபோல ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் இவ்விடத்தில் மிக அக்கறையாகவுள்ளார்.

எனவே அனைவரும் ஒருமித்து போரை முடிவுக்கு கொண்டு வந்தாலே யுத்தச்செலவினத்தைக் குறைத்து பொருளாதார உறுதியை ஏற்படுத்த முடியும். (இ)

### மருத்துவமுகாம் நடாத்த கோரிக்கை

[வடமராட்சிகிழக்கு]

வடமராட்சி கிழக்கு மணற் காட்டுப் பகுதியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையினர் வாரத்தில் ஒரு தடவை மருத்துவ முகாம் ஒன்றை நடத்த வேண்டும் என இப்பகுதி மக்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-43)

### மாணவர்களும்...

உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர், சமரசத் தீர்வை அடுத்து இன்று முதல் விரிவுரைகளுக்கு செல்வதற்கு மாணவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும்பீடாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை மோதல்சம்பவம் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை நடாத்துவதற்காக கல்வி அமைச்சில் இருந்து ஒரு குழு வரவுள்ளதாகவும் இக்குழு மோதல் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரினதும் வாக்கு மூலம் பெறவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (ம)

## மரண அறிவித்தல்

### தம்பு கதிரவேலு

நீர்வேலிதெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பு கதிரவேலு (11.03.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார் இவர் காலஞ்சென்ற தம்புகுட்டிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், மனோகரி (ஜேர்மனி), பத்மினி (கோட்டக் கல்விஅலுவலகம் கோப்பாய்), விஜயகுமாரி (ஜேர்மனி) ஜெயச்சந்திரன் (ஜேர்மனி). கௌரி (கணக்காளர் கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற சிவனேசன் (இ.போ.ச), இந்திரகுமார், மனோகரன் (ஜேர்மனி), லவன் [கணக்காளர் கனடா] ஆகியோரின் மாமனாரும் மயூரன், மகிந்தன், விஜிந்தன் மயூரேசன், அஜித் ஆகியோரின் பேரனும் காலம் சென்ற சரவணமுத்து, சின்னப்பிள்ளை, முதலியார் சங்கரப்பிள்ளை, திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரனும், கனகசபை [அவுஸ்திரேலியா], இராசரத்தினம் [இராசலட்சுமி, நகுலேஸ்வரி கொழும்பு] ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் [11.03.2001] ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன

பருத்தித்துறைவீதி
நீர்வேலி தெற்கு
நீர்வேலி

தகவல்
க கனகம்மா
[மனைவி]

[2624]

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### உயர்திரு ஆ. மகாலிங்கம்

புகழ் பூத்த தேகம் புகலுடம்பாய் மாறியதோ!
மகிழ்வூட்டும் மாலைகள்விழ - ஒன்றாய்சுன்னாகப்
-பட்டினத்தில் எண்வரும்
எழில் கொஞ்சும் வாதாட்டம் நிறைந்த நீங்கள்
இன்றில்லை;
தொழில் இணைந்து காலை மதியம் மாலை யென
உங்களோடு
ஓ.. காலன் உமைப்பிரிக்க இறுதியிலே நின்றேன்
கதறுகிறேன் இன்று ஐயனே காண்பதெப்போ!

அன்னரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

J--160 கிராம உத்தியோகத்தரும்
குடும்பத்தினரும்

(2634)

## கண்ணீர் அஞ்சலி

உடுவில், நல்லூர் ஆகிய பிரதேசங்களின் பிரதேச செயலரும் இந்து சமயப் பேரவையின் உப தலைவருமான

அமரர்

### ஆறுமுகம் மகாலிங்கம் (பி.ஏ)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/புன்னாலைக் கட்டுவன் மகா வித்தியாலயம்,
சுன்னாகம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பெற்றார் ஆசிரியர் சங்கம்-

[2628]